**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No. 608/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W-4 |
| Name | : | ஆறுமுகம், வயது 33 |
| Father Name/Husband Name | : | சண்முகத்துரைப்பாண்டி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of October 2023.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து விவசாயம் செய்கிறேன். கடந்த 22.11.2022 ஆம்தேதி இரவு 11.00 மணியளவில் நானும் ராமசாமி என்பவரும் எட்டையாபுரம் ரோட்டில் உள்ள கனரா பேங் அருகே எட்டையாபுரத்தில் இருந்து எங்கள் ஊருக்கு வந்து கொண்டிருந்த போது ரோட்டில் நிறைய போலிசார் நின்று கொண்டிருந்தனர்.
2. கனரா வங்கியின் அருகே உள்ள கட்டிடங்களை பார்த்து படம் வரைந்து மற்றோருபேப்பரில் எழுதினார்கள். அதனைபடித்து பார்த்து காண்பித்தார்கள் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (பார்வை மகஜரில்) உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **(அந்த ஆவணம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. போலிசார் எதற்காக கையொப்பம் வாங்குவதாக சொன்னார்களா என்றால் என்ன வழக்கு என்று சொன்னார்கள் எனக்கு தற்போது மறந்துவிட்டது. நீங்கள் போகும் போது போலிசார் எழுதி வைத்திருந்தார்களா என்றால் இல்லை எழுதிக்கொண்டிருந்தார்கள் நாங்கள் பாத்துக்கொண்டிருந்தோம்.
2. என்ன எழுதினார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால் படித்து காண்பித்தார்கள் தற்போது மறந்துவிட்டது. கூட்டமாக

ஆட்கள் இருந்தார்களா என்றால் 4, 5 பேர் இருந்தார்கள். அவர்களிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் நானும் ராமசாமியும் கையொப்பம் செய்துவிட்டு கிளம்பிவிட்டோம். ராமசாமிகையெழுத்து போட்டுவிட்டு வந்துவிட்டாரா என்றால் முதலில் கையொப்பம் செய்துவிட்டு நின்று கொண்டிருந்தார் அதன் பிறகு நான் கையொப்பம் செய்தேன்

3. அதன் பிறகு காவல்நிலையத்திற்க கூப்பிட்டார்களா என்றால் இல்லை. நீங்கள் சொன்னது போல் சொன்ன நாள் நேரத்தில் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றாலும் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.